செய்தி வெளியீடு எண் : 387 நாள் : 28.02.2023

## செய்தி வெளியீடு

## “ஏற்றமிகு ஏழு திட்டங்கள்” கீழ் புதிய திட்டங்களை தொடங்கி வைத்து, பல்வேறு மருத்துவமனைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பணி நியமன ஆணைகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (28.2.2023) சென்னை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், ஏற்றமிகு ஏழு திட்டங்களின் கீழ், ஊட்டச் சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு சிறப்பு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம், திருநங்கையர்களுக்கான மாதாந்திர உதவித் தொகையை 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் விரிவாக்கம் செய்யும் திட்டம், சென்னை மாநகரப் பகுதியில் கழிவுநீர் அகற்றும் பணிகளை நவீனப்படுத்தி, தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களை தொழில்முனைவோர்களாக ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்கான சிறப்புத் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஆகியவற்றை தொடங்கி வைத்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.1,136.32 கோடியில் 44 புதிய மருத்துவமனைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசுப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும், கருணை அடிப்படையிலும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுச்சுடர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்த சமூகநீதிப் பாதையில், ஏழை, எளிய நடுத்தர மக்கள், விவசாயிகள், மாணவர்கள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்ற திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படையில், விவசாயிகளின் வாழ்வு மலர்ந்திட 1.50 இலட்சம் இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மகளிருக்கு இலவச பேருந்துப் பயண சலுகை, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/- உதவித்தொகை வழங்கும் திட்டம், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்கள், படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மற்றும் வழிகாட்டுதல் திட்டமாகிய **‘நான் முதல்வன்’** திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவத் திட்டம், இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டம், அரசுப் பள்ளிகளை மேம்படுத்திட நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன் திட்டம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், கள ஆய்வில் முதலமைச்சர், எழுத்தாளர்களுக்கான கனவு இல்லம் திட்டம்,

தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒலிம்பிக் தங்கவேட்டை திட்டம், போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று ஏற்றமிகு ஏழு திட்டங்களை தொடங்கி வைக்கும் விதமாக:

**ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கான சிறப்பு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம்**

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் ‘‘ஊட்டச்சத்தை உறுதிசெய்’’ திட்டத்தின் கீழ், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 1,11,216 குழந்தைகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் வகையில் 8 வாரங்களுக்கு (56 நாட்கள்) சிறப்பு உணவாக, உடனடியாக உட்கொள்ளும் சிகிச்சை உணவு (Ready to Use Therapeutic Food - RUTF) அளிக்கவும், 0 முதல் 6 மாதம் வரையுள்ள 11,917 கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளின் தாய்மார்களுக்கு அவர்களின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தி குழந்தைகளுக்கு தேவையான தாய்ப்பால் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் 2 ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

உடனடியாக உட்கொள்ளும் சிகிச்சை உணவு (RUTF) என்பது குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்தக்கூடிய UNICEF அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட வழுவழுப்பான பசை (paste) போன்று இருக்கும் உணவுப் பொருளாகும். இதில், அரைத்த வேர்க்கடலை, பால் பவுடர், எண்ணெய், சர்க்கரை, வைட்டமின்கள் மற்றும் மினரல் ஆகிய பொருட்கள் அடங்கி இருக்கும்.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள தாய்மார்களுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து பெட்டகத்தில், தாய்மார்களுக்கான சிறப்பு ஆரோக்கிய உணவுக் கலவை, இரும்புச் சத்து மருந்து (Iron syrup), விதை நீக்கப்பட்ட பேரீச்சம் பழம், குடற்புழு நீக்க மாத்திரை, ஆவின் நெய் மற்றும் பருத்தி துண்டு ஆகியன அடங்கியிருக்கும்.

**திருநங்கையர்களுக்கான ஓய்வூதியத்தை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கும் திட்டம்**

திருநங்கைகளுக்கு கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதற்காகவும், சமுதாயத்தில் அவர்களுக்கான அங்கீகாரத்தை ஏற்படுத்தவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ‘‘திருநங்கையர்’’ என்று அவர்களுக்கு பெயர் சூட்டி, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில், 2008-ஆம் ஆண்டு திருநங்கைகள் நல வாரியத்தை அமைத்தார்.

திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் திருநங்கைகளுக்கு அடையாள அட்டை, குடும்ப அட்டை, சுயதொழில் தொடங்க மானியத் தொகை, சுயஉதவிக் குழு பயிற்சி, காப்பீட்டுத் திட்ட அட்டை, இலவச தையல் இயந்திரங்கள் போன்றவை

வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, தங்களது வாழ்வாதார செலவுகளுக்கு வருமானம் ஈட்ட இயலாத 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கைகளுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கைகளுக்கு தற்போது வழங்கப்படும் 1000 ரூபாய் ஓய்வூதியத் தொகையை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3 திருநங்கைகளுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதிய தொகைக்கான ஆணைகளை வழங்கினார்.

**<u>மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்</u>**

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் ஏழை எளிய மக்களுடைய குழந்தைகளின் கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டினை போக்கவும், வருகையை அதிகரிக்கவும், வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கு செல்லும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 15.9.2022 அன்று தொடங்கி வைத்தார்.

தற்போது, 15 மாநகராட்சிகள் மற்றும் 23 நகராட்சிகள் உள்ளடக்கிய 38 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அமைந்துள்ள 539 பள்ளிகளில் பயிலும் 50,306 மாணவர்களுக்கு, இத்திட்டத்திற்கென சிறப்பாக அமைக்கப்பட்ட 46 ஒருங்கிணைப்பு சமையற்கூடங்களில் தினந்தோறும் உணவு சமைக்கப்பட்டு, சமைக்கப்பட்ட உணவு சூடான வெங்கலனில் (Hot box) நிரப்பப்பட்டு, சிறப்பு வாகனங்கள் மூலமாக ஒவ்வொரு பள்ளிக்கும் உரிய நேரத்தில் கொண்டு செல்லப்பட்டு, மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களால் வெகுவாக வரவேற்கப்பட்டு வரும் இத்திட்டத்தினை, மேலும் விரிவுபடுத்தும் வகையில், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர், கும்பகோணம், வேலூர், ஆவடி, மதுரை, சேலம், திண்டுக்கல், திருநெல்வேலி, ஈரோடு, நாகர்கோவில், கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளிலும், மேட்டுப்பாளையம், மதுக்கரை, கோவில்பட்டி, விழுப்புரம், திருவண்ணாமலை, திருவத்திபுரம், ஆற்காடு, ஆம்பூர், வாணியம்பாடி, புதுக்கோட்டை, பெரம்பலூர், ஜெயங்கொண்டம், நாகப்பட்டினம், மன்னார்குடி, சீர்காழி, நாமக்கல், திருச்செங்கோடு, பரமக்குடி, காரைக்குடி, நந்திவரம் கூடுவாஞ்சேரி, மறைமலைநகர் ஆகிய நகராட்சிகளிலும், என மொத்தம் 36 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 433 பள்ளிகளில் பயிலும் 56,098 மாணவர்கள் பயன்பெறும் வகையில், விரிவுப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கும் விதமாக 3 மாணவர்களுக்கு

காலை உணவுப் பெட்டகத்தை வழங்கினார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) மற்றும் தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்கம் (DICCI) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் பாதாள சாக்கடை பராமரிப்பு மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களின் உயிரிழப்பை முற்றிலும் தவிர்ப்பதற்காக இப்பணிகளை நவீன இயந்திரங்கள் மூலம் நிறைவேற்றிட, தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை தொழில்முனைவோர்களாக ஒருங்கிணைத்து செயல்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) மற்றும் தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்கம் (DICCI) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்மூலம், இறந்த தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு தேவையான அறிவுரைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு தேவையான வழிமுறைகளை வழங்கி, ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க அனைத்து பயிற்சிகளையும் அளித்து, அரசு திட்டங்களிலிருந்து மானியத்தை பெற்று தொழில் முனைவராக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், தூய்மைப் பணியாளர்கள் கழிவுநீர் குழாய்களில் மேற்கொள்ளும் பராமரிப்பு பணிகளை நவீன இயந்திரங்களைக் கொண்டு கையாளுவது, நச்சுத் தொட்டிகளை பாதுகாப்பாக சுத்தப்படுத்த தேவையான இயந்திரங்களை கையாள்வது உள்ளிட்ட பயிற்சிகளை வழங்கி அவர்களை துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவன அமைப்பாக மாற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலமாக சென்னை பெருநகர பகுதியில் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வின்போது, தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்க நிறுவனர்/தலைவர் முனைவர் மிலிந்த் காம்ப்ளே, தேசிய தலைவர் திரு.ரவிக்குமார் நர்ரா, தேசிய துணைத் தலைவர்கள் முனைவர் ராஜா நாயக், திரு. சஞ்சீவ் டாங்கே, தென்னிந்திய தலைவர் திரு.சௌந்தர் ராஜன், தமிழ்நாடு தலைவர் திரு.தினேஷ் சங்கர் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 1,136.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 44 மருத்துவக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.**

அரியலூர் மாவட்டம் - ஜெயங்கொண்டம், செங்கல்பட்டு மாவட்டம் - தாம்பரம், திண்டுக்கல் மாவட்டம் - பழனி, கள்ளக்குறிச்சி மாவட்டம் - திருக்கோவிலூர்,

இராமநாதபுரம் மாவட்டம்-பரமக்குடி, திருவள்ளூர் மாவட்டம்-திருத்தணி, திருப்பத்தூர் மாவட்டம்-திருப்பத்தூர், திருப்பூர் மாவட்டம்-காங்கேயம், வேலூர் மாவட்டம்-குடியாத்தம், விழுப்புரம் மாவட்டம்-திண்டிவனம், விருதுநகர் மாவட்டம்-அருப்புக்கோட்டை ஆகிய அரசு மருத்துவமனைகள் 550.85 கோடி ரூபாய் செலவில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்திடவும்;

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் சிறப்பு சிகிச்சை கட்டடம், தூத்துக்குடி மாவட்டம்-திருசெந்தூர் அரசு மருத்துவமனையில் தாய் சேய் நலப் பிரிவு மற்றும் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம், திருப்பத்தூர் மாவட்டம்-ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு கட்டடம் என 206.82 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்கள்;

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை மாவட்டம்-மேலூர், கிருஷ்ணகிரி மாவட்டம்-ஊத்தங்கரை மற்றும் சென்னை மாவட்டம் -சோளிங்கநல்லூர் ஆகிய அரசு மருத்துவமனைகளில் 131 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 50 படுக்கைகள் மற்றும் 100 படுக்கைககள் கொண்ட அவசரகால கவனிப்பு பிரிவுக் கட்டடங்கள்;

சென்னை-அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை, கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தருமபுரி மாவட்டம்-பென்னாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, சென்னை-தண்டையார்பேட்டை அரசு மருத்துவமனை, திருப்பூர் மாவட்டம்-அவினாசி அரசு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் 120.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய தாய் சேய் நலப் பிரிவுக் கட்டடங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம்-காரப்பேட்டை, அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக கட்டப்படவுள்ள மூன்று தளங்கள்; இராமநாதபுரம் மாவட்டம்-பரமக்குடி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள், அரியலூர் மாவட்டம்-ஜெயம்கொண்டம் அரசு மருத்துவமனையில் ஒருங்கிணைந்த அவசரகால சிகிச்சை பிரிவுக் கட்டடம் என 13 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்கள்;

கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மாவட்டம்-பொள்ளாச்சி, திருவண்ணாமலை மாவட்டம்-செய்யார், சென்னை-சைதாப்பேட்டை மருத்துவமனை, திருநெல்வேலி மாவட்டம்-வள்ளியூர், திண்டுக்கல் மாவட்டம்-பழனி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்-மணப்பாறை, மதுரை மாவட்டம்-மேலூர் ஆகிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள்;

கடலூர் மாவட்டம் - மஞ்சகொல்லை மற்றும் ஒரங்கூர், திண்டுக்கல் மாவட்டம் - ஆடலூர் பன்றிமலை, மார்க்கம்பட்டி மற்றும் சிவகங்கை மாவட்டம் - சங்கராபுரம் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்கள்;

என மொத்தம் 1,136.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 44 மருத்துவக் கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**<u>மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்</u>**

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்துத் தருவதற்கு ஏதுவாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிடும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 மாற்றுத்தினாளிகளுக்கு வீட்டுமனைப் பாட்டாக்களை வழங்கினார்.

**<u>பல்வேறு அரசுத் துறைகளுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும், கருணை அடிப்படையிலும் பணி நியமன ஆணைகள்</u>**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் குடும்ப நல இயக்குநரகத்திற்காக வட்டார சுகாதார புள்ளியியளாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 192 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கும்;

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்திற்காக கணக்கிடுபவர் மற்றும் தடுப்பூசி பண்டகக் காப்பாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 28 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 2 நபர்களுக்கும்;

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கும்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், அலுவலக உதவியாளர், பதிவறை எழுத்தர், பணி ஆய்வர் ஆகிய பணியிடங்களுக்கு 50 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. வைகோ, டாக்டர் கனிமொழி சோமு, திரு. ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.டி.ஆர்.பி. ராஜா, திரு. ஆர். மூர்த்தி, திரு.கு. செல்வப்பெருந்தகை, பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் திரு. துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பூச்சி எஸ். முருகன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில் குமார், இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் டாக்டர் ஆர். ஆனந்த குமார், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த. மோகன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in